Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 35 இதழ் - 7 ஜுலை - 2022

தனிப்பிரதி ரூ.10/-



**நெல்லையில் 17.7.2022 அன்று நடந்த இலவச மருத்துவ முகாமின் போது....**







## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| கிறிஸ்தவம் ஓர் அந்நிய .... | 12 |
| பெண்கள் பகுதி | 16 |
| வாலிபர் பகுதி | 19 |
| சிறுவர் பகுதி | 23 |
| நம்முடைய ஜீவனாகிய .... | 25 |
| இயேசுவை பின்பற்றுபவர்க.... | 26 |
| கிறிஸ்து என்னும் மார்க்கம் ... | 29 |
| ஒருவரையும் அற்பமாக .... | 32 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 35 July - 2022 Issue - 7

ஆசிரியர் உரை

## இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல!

ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் உண்டாக்கின நாள் முதற்கொண்டு நாம் வாழும் இப்பூமி பற்பல நிகழ்வுகளை அவ்வப்போது கண்டு வந்துள்ளது. அந்நிகழ்வுகள் சரித்திர ரீதியாக நடந்திருக்கலாம், பூகோள ரீதியாக ஏற்பட்டிருக்கலாம், அரசியல் ரீதியாக முடிந்திருக்கலாம். இன்னும் அவை ஆன்மீக ரீதியாகக் கூட உண்டாயிருக்கலாம். ஆனால், அப்படி நடந்த எல்லா நிகழ்வுகளுக்கும் ஜனங்களும், சரித்திரமும் சமமான முக்கியத்துவம் கொடுத்துவிடுவதில்லை. ஏன் கொடுக்கவில்லை என்பதற்கான காரணத்தை நாம் பூத கண்ணாடி வைத்துத் தேடிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமுமில்லை. ஏனெனில், ஒருநிகழ்வு முக்கியமானதா அல்லது முக்கியமற்றதா, ஜனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதா, சரித்திரத்தால் அங்கீகரிக்கப்பட்டதா அல்லது தள்ளப்பட்டதா என்பது பல அம்சங்களை உள்ளடக்கியதாக உள்ளது. ஆம், ஒரு நிகழ்வு எந்தக் காலகட்டத்தில் நடந்தது. அந்நிகழ்வில் சம்பந்தப்பட்டவர்கள் யார், யார், அந்நிகழ்வால் உண்டான பாதிப்பு எப்படிப்பட்டது, அது ஏற்படுத்திய தாக்கம் எந்தளவு உள்ளது, அந்நிகழ்வால் விளைந்த நன்மை, தீமைகளின் அளவு என்ன என்பன போன்ற பல காரியங்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டு, அதன்பிறகே அதன் முக்கியத்துவம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் தான் ஒவ்வொரு நிகழ்வும் பார்க்கப்பட்டு அதற்கான முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. ஆனால், சில நேரங்களில் சில நிகழ்வுகள் வேண்டுமென்றே குறைத்து மதிப்பிடப்பட்டு, அதன் முக்கியத்துவம் கண்டும் காணாமலும் விடப்பட்டுள்ளது. இதற்கான மிகச் சிறந்த உதாரணம், முதல்

நூற்றாண்டில் நம்முடைய இரட்சகராகிய இயேசு ஆண்டவர் சம்பந்தப்பட்ட காரியங்களே. அவர் வாழ்ந்த முதலாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், அவர் உயிர்த்தெழுந்த பின்னான நாட்களிலும், அவர் பற்றிய காரியங்கள் அன்றைக்கிருந்த ஆட்சி யாளர்களாலும், மதத்தலைவர்களாலும் திட்டமிட்டு அமுக்க முயற்சிக்கப்பட்டது. அதிலே அவர்கள் வெற்றி பெற முடிய வில்லை என்பது வேறுவிஷயம். ஆனால், இதுதான் நடந்த உண்மை . இப்படி மறைக்க முயற்சிக்கப்பட்ட பகிரங்கமான உண்மை பற்றிதான் மாமனிதனாகிய அப்போஸ்தலன் பவுல், ஒரு சமயம் அகிரிப்பா ராஜாவினிடத்தில், **மூடி மறைப்பதற்கு இது ஒன்றும் ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல** என்று சத்தமாகக் கூறினார்.

சரி, பவுலடியார் இதை எந்தச் சூழ்நிலையில் சொன்னார் என்பதை தெரிந்து கொள்ள, நமது வழக்கத்தின்படியாக இதன் பின்னணியைக் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

மூன்று நற்செய்திப் பயணங்களை மேற்கொண்ட பவுல், தனது மூன்றாம் பயணத்தை முடித்துக் கொண்டு எருசலேமுக்கு வந்து சேர்ந்தார் [அப்.21:18]. அங்கு அப்போஸ்தலர்களின் ஆலோசனை யின் பேரில் சில யூதமார்க்க சம்பிரதாயங்களை முடித்த நிலையில் [21:26] ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்களால் பிரச்சினை ஏற்பட்டு காரியம் கை மீறிப்போனது [அப். 21:27-31]. பிறகு சேனாதிபதியின் தலையீட்டின் பேரில் காப்பாற்றப்பட்டு, கோட்டை க்குள் எப்படியோ கொண்டு போகப்பட்டான் [32-34]. அதன் பிறகு, அவன் ஆலோசனைச் சங்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு உத்தரவு சொல்லுகையில் கலகம் உண்டானதினால் மீண்டும் கோட்டைக்குள் கொண்டு போகும்படி சேனாதிபதி லீசியா கட்டளையிட்டான் [23:10] ஆனால், அவன் மீது குற்றம் சாட்டினவர்களோ, தாங்கள் பவுலைக் கொலை செய்யுமளவும், புசிப்பதுமில்லை, குடிப்பதுமில்லையென்று சபதம் பண்ணிக் கொண்டு சரியான சமயத்துக்குக் காத்திருந்தார்கள் [அப். 23:12,13]. இக்கொலைச் சதிக்கு யூத மத உயர் அமைப்பான ஆலோசனைச் சங்கத்தாரும் உடந்தையாயிருந்திருக்கிறார்கள் [23:15] என்பது கேட்பதற்கே எப்படியோ உள்ளது!

ஆனால், இந்தச் சதியாலோசனை அரசல்புரசலாக பவுலின் சகோதரியின் மகனுக்குத் தெரியவந்தது. பிறகு பவுல் வழியாக சேனாதிபதியாகிய லீசியாவின் காதுகளுக்குப் போய்ச் சேர்ந்த போது, அவன் சாதுரியமாகச் செயல்பட்டு தேசாதிபதி பேலிக்ஸிடம் மேற்கொண்டு விசாரிக்கப்படும்படி அனுப்பி வைத்தான். ஆனால், இந்த உல்லாசப் பிரியனாகிய பேலிக்ஸ் எது நியாயம், எது நீதி என்று தெரிந்து கொள்ள முயற்சிக்காமல், பணத்தாசை பிடித்த

வனாக இருந்து, பணத்தைப் பெற்றுக்கொண்டு நீதியின் குரல் வளையை நெறிக்க ஆயத்தமாக இருந்தான். இங்கே வசனத்தைக் கவனியுங்கள். மேலும், **அவன் பவுலை விடுதலை பண்ணும்படி தனக்கு அவன் பணம் கொடுப்பானென்று நம்பிக்கையுள்ளவனாயிருந்தான்; அதினிமித்தம் அவன் அநேகந்தரம் அவனை அழைத்து அவனுடனே பேசினான்**'' (24:26). சத்தியவானாகிய பவுல், தன் நம்பிக்கைக்காக எப்படிப்பட்ட இழி பிறவிகளுக்கு முன்பாக போய் நிற்க வேண்டியிருந்துள்ளது பாருங்கள்!.

இந்த பேலிக்ஸை அடுத்து, ஒரு தேசாதிபதி வந்தான், அவன் பெயர் பெஸ்து. இவனாகிலும் நல்லவனா என்று பார்த்தால் அங்கும் பவுலுக்கு ஏமாற்றமே. ஆம், இந்த ஆளுநர், பவுலின் மீது சாட்டப் படுகின்ற அநேகங் கொடிய குற்றச்சாட்டுகளின் பின்னணியையும், சாட்டுகிற மனிதர்களின் உள்நோக்கத்தையும் புரிந்து கொள்ளாமல், யூதர்களுக்கு தயவு பண்ண மனதாய், விசாரிக்கப்பட எருசலேக்கு வர உனக்கு சம்மதியா என்று கேட்டான். (25:7-9) விசாரணை என்ற பெயரில் பின்னப்பட்டிருக்கும் சதி வலையைக் கனகச்சிதமாகப் புரிந்து கொண்ட பவுல் மிகுந்த ஞானமாக நான் இராயனுக்கு அபயமிடுகிறேன் என்றான். நொண்டிக் குதிரைக்கு சறுக்கினதே சாக்கு என்பது போல ''நீ இராயருக்கு அபயமிட்டாயே; இராயரிடத்திற்கே போகக்கடவாய் என்று உத உத்தரவு சொன்னான் இந்த பெஸ்து. தன் பொறுப்பை உணர்ந்து, கடமையாற்றத் தெரியாத கையாலாகாத மனிதனெல்லாம் அன்றைக்கு நாற்காலியில் அமர்ந்திருந்துள்ளனர். இவர்களுக்கு முன்பாகவும் பவுல் நிற்க வேண்டியதொரு நிலை. எவ்வளவு கொடுமையான சூழ்நிலைகளையெல்லாம் பவுல் சத்தியத்தினிமித்தம், ஊழியத்தினிமித்தம் கடந்து வந்துள்ளார் பாருங்கள்.

பிறகு கொஞ்ச நாட்கள் கழித்து, அகிரிப்பா ராஜாவும் பெர்னீக்கேயாளும் விருந்தாளிகளாக பெஸ்துவைக் கண்டு கொள்ளும்படி வந்தனர். பவுலைப் பற்றி பெஸ்து மூலமாய் கேள்விப்பட்ட அகிரிப்பா, அந்த மனுஷன் சொல்லுகிறதை நானும் கேட்க மனதாயிருக்கிறேன் என்றான் (25:22) ''தர்ம அடி என்பது போல, பவுல் ''தர்ம விசாரணை' செய்யப்படுகிறான். இருப்பினும் அகிரிப்பாவிற்கு முன்பாக விசாரணைக் கைதியாக நிற்பதில் பவுலுக்குக் கொஞ்சம் திருப்தி. ஏனெனில், ''யூதருடைய சகல முறைமைகளையும், தர்க்கங்களையும் அவன் அறிந்திருந்தான் (26:3) அப்படி அறிந்திருந்தபடியால் இவனிடத்திலாகிலும் நியாயம் கிடைக்காதா என்ற நப்பாசை உள்ளூர பவுலுக்கும் இருந்திருக்கும். அப்படித்தானே! ஆகவே தான், விலாவாரியாக உத்தரவு கொடுக்கிறான். **ஆம், தன் சிறுவயது வாழ்க்கை, இயேசுவால் சந்திக்கப்பட்ட விதம், அந்த அழைப்புக்கு அடிபணிந்த அழகு,**

**பிறகு கிறிஸ்துவுக்காக இவன் செய்த ஊழியம் என்று காரியங்களை வரிசையாய் அடுக்கி வாதத்தை திறமையாக எடுத்து வைத்தான்.** அத்தோடு, யூதர்களிடத்திலும், அவர்கள் தேவனிடத்திற்கும் மனந்திரும்பிக் குணப்படவும். மனந் திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டு மென்று அறிவித்தேன்'' என்றான் [26:20] எவ்வளவு பக்தி வைராக்கியத் தோடு பவுல் பேசியிருக்கிறாரென்று பாருங்கள்.

ஆனால், அகிரிப்பா ராஜாவோடு அமர்ந்து பவுலின் வாதத்தைக் கேட்டுக் கொண்டிருந்த கையாலாகாத மனிதனாகிய தேசாதிபதி பெஸ்துவுக்கோ ''அது பிதற்றலாகவும், பைத்தியமாகவும்'' தெரிந்திருக்கிறது.[26,24]ஆம், அவன் ''பவுலே நீ பிதற்றுகிறாய், அதிக கல்வி உனக்கு பைத்தியமுண்டாக்குகிறது என்றான்''. தன்னை ஒருவன் பைத்தியக்காரனென்று சொன்ன நிலையிலும், நிதானம் இழக்காத பவுல், இல்லையில்லை, நான் சத்தியமும் சொஸ்தபுத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன் என்று பதிலளித்து விட்டு [26:25] இதற்கு மேல் இவனிடம் பேசிப் பயனில்லை என்பதைத் தெரிந்து கொண்டு, அகிரிப்பா ராஜாவின் பக்கமாய்த் திரும்பி இந்தச் சங்கதிகளை ராஜா அறிந்திருக்கிறார். ஆகையால், தைரியமாக அவருக்கு முன்பாகப் பேசுகிறேன். இவை களில் ஒன்றும் அவருக்கு மறைவானதல்லவென்று எண்ணு கிறேன்; ''இது,ஒரு மூலையில் நடந்த காரியமல்ல'' என்றான் [26:26].

இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்லவென்று பவுல் சொன்னபோது, எவைகளை மனதில் கொண்டவராகப் பேசியிருப்பார்? தான் பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டு, ஆலோ சனை சங்கத்துக்கு முன்பாகக் கொண்டு போகப்பட்டது பற்றியும், விசாரணை என்ற பெயரில் வித்தியாசமான மனிதர்கள் முன்பாக நிறுத்தப்பட்டதையுமா பேசியிருப்பார்? ஒருவேளை இவைகளும் ஒரு மூலையிலே நடந்த காரியமல்லவென்றாலும் இவைகளைச் சொல்லிப் பெருமையடித்துக் கொள்ளும்படியாகவா பவுல் முயன் றிருப்பார்? கண்டிப்பாக அப்படியிருக்க நியாயமில்லை. ஏனெனில், கிறிஸ்துவுக்காக தனக்கு லாபமாயிருந்தவைகளை யெல்லாம் நஷ்டமென்று எண்ணியவராயிற்றே இந்தப் பவுல்! [பிலி.3:7]. அப்படியானால், இது மூலையிலே நடந்த காரியமல்ல வென்று எதைப் பற்றித்தான் சொல்லியிருப்பார்? சொல்லுங்கள். கண்டிப் பாக, பவுலின் நம்பிக்கை நாயகராயிருந்த இயேசு பற்றிய காரியங் களைத்தான் இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல வென்று சொல்லியிருப்பாரேயொழிய வேறொன்றைப் பற்றியுமிருக்காது.

இயேசு பற்றிய காரியங்கள் எதுவும் ஒரு மூலையிலே நடந்தவை அல்ல. ஆம், அவருடைய பிறப்பு பற்றிய அறிவிப்பு, அவருடைய வாழ்க்கை, அவருடைய ஊழியம், அவருடைய

மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், அவர் வாக்களித்துக் கட்டின சபையின் ஆரம்பம், அதன் வளர்ச்சி இப்படி எதுவுமே மூலையிலே நடந்ததல்ல. எல்லாமே வெட்ட வெளிச்சமானவையே. ஆயினும், இவை எல்லாவற்றையும் நாம் இங்கே பார்க்க டியாதாகையால், ஒரு மூன்றை மாத்திரம் நமக்காக இங்கே எடுத்துக்கொண்டு சில பாடங்களைக் கற்றுக்கொள்ளுவோம்.

**I கிறிஸ்துவின் முதலாம் வருகை ஒரு மூலையிலே நடந்த ஒன்று அல்ல.**

இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல'' என்ற தலைப்பின் கீழாக நமக்குக் கிடைக்கும் முதலாவது பாடம், இயேசுவின் முதலாம் வருகை பற்றிய காரியங்கள் எதுவுமே ஒரு மூலையிலே நடந்தவை அல்ல என்பது.

அப்போஸ்தலன் பவுல், அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்லவென்று சொல்லும் போது, கிறிஸ்துவின் முதலாம் வருகையை மனதில் கொண்டவராகவும் பேசியிருக்க வேண்டும். எப்படியெனில், அவர் எந்த நம்பிக்கை காக குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டாரோ அந்த நம்பிக்கைக்கு அடித்தளமே கிறிஸ்துவின் முதலாம் வருகையும், அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களும் தான்.

அந்த முதலாம் வருகையின் அபாரம் பற்றி, வேதாகமம் பல ஆச்சரியமான தகவல்களை நமக்கு அள்ளிக் கொடுக்கிறது. அவருடைய பிறப்பு முதல், உயிர்த்தெழுதல் வரைக்குமான சகல காரியங்களும் தீர்க்கதரிசிகளால் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே முன்னுரைக்கப்பட்டு, துல்லியமாகப் பேசப் பட்டுள்ளது. ஆம், அவர் கன்னியின் வயிற்றிலே பிறப்பார், கள்வர்களுடன் மரிப்பார், ஐசுவரியவானுடைய கல்லறையில் அடக்கம் பண்ணப்படுவார் என்று ஏசாயாவும் [7:17, 53:9-12], யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார் என்று மீகாவும் [5:2], எகிப்துக்குப் போவார் என்று ஓசியாவும் [11:1] முப்பது வெள்ளிக் காசுக்குக் காட்டிக் கொடுக்கப்படுவார் என்று சகரியாவும் [11:12-13] கூறியுள்ளனர். இவைகள் போதாது என்பது போல, சங்கீதங்களிலே, அவர் காட்டிக் கொடுக்கப்படுவது [41:9], அவருடைய கைகளிலும், கால்களிலும் ஆணிகள் உருவப் படுவது [22:16] காடியைக் குடிக்கும்படி கொடுப்பது [69:21] வஸ்திரங்களைச் சீட்டுப் போடுவது [22:10] எலும்புகள் முறிக்கப் படாது என்பது [34:20]. மற்றும் அவர் உயிரோடே எழுப்பப்படுவார் என்பது [16:10] போன்ற பல காரியங்கள் அழகாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

இந்தத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்ட காரியங்கள னைத்தும் பழைய ஏற்பாட்டுப் பக்தர்களால் முறையாக

வாசிக்கப்பட்டு, ஓய்வு நாள் தோறும் போதிக்கப்பட்டவை. அவை, எந்தளவு விசுவாசிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதென்பதில் கொஞ்சம் மாறுபட்ட கருத்து இருந்தாலும், இவைகள் வெளிப் படுத்தப்படாதவைகளோ, இரகசியமாக வைக்கப்பட்டவைகளோ அல்லது ஒரு மூலையிலே போட்டு அமுக்கப்பட்டவைகளோ அல்ல என்பது நிச்சயம். தீர்க்கதரிசிகளால் முன் அறிவிக்கப்பட்ட அனைத்தும் புதிய ஏற்பாட்டிலே அப்படியே அட்சரம் பிசகாமல் நிறைவேறியுள்ளது. அப்படியானால், கிறிஸ்துவின் முதலாம் வருகை ஒரு மூலையிலே நடந்ததாக எப்படியிருக்க முடியும்? நிச்சயமாக அது ஒரு மூலையிலே நடந்த ஒன்று அல்ல.

அன்பானவர்களே, இயேசு ஆண்டவரின் முதலாம் வருகை பற்றிய காரியங்களை பவுல் இந்தளவு அறிந்திருந்தபடியால் தான்'' மிகுந்த தைரியமாக, அகிரிப்பா ராஜாவே, ''இது ஒன்றும் மூலை யிலே நடந்த காரியமல்ல என்று சொல்ல முடிந்தது. ஆனால், இதை வாசிக்கின்ற நாம் ஒவ்வொருவரும் அவருடைய முதலாம் வருகை பற்றிய காரியங்களில் இவ்வளவு ஆழமான அறிவு கொண் டவர்களாக உள்ளோமா? தயவு செய்து எண்ணிப் பார்ப்போம்.

### II **கிறிஸ்துவின் ஊழியம் ஒரு மூலையிலே நடந்த ஒன்று அல்ல**

இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல'' என்ற தலைப்பின் கீழாக நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம், அவருடைய ஊழிய காரியங்கள் எதுவும் ஒரு மூலையிலே நடந் தவை அல்ல என்பது.

இயேசு எல்லா நீதியையும் நிறைவேற்றும்படி ஞானஸ் நானம் பெற்றுக் கரையேறிய பிறகு, பிசாசினாலே சோதிக்கப் படுவதற்கு ஆவியானவராலே வனாந்திரத்திற்குக் கொண்டு போகப்பட்டார் [மத்.4:1] அங்கு அவர் '' வேத வசனங்களைக் கொண்டு பிசாசா னவனை புறமுதுகு காட்டச் செய்ததற்குப் பிறகு, ''மனந் திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது'' என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்.

அப்பொழுது தம்மண்டை வந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஆத்தும குணத்திற்கான பிரசங்கத்தோடு நிறுத்தாமல், சரீர சுகத்தையும் சேர்த்து வழங்கினார் [மத். 4:23] மருத்துவ விஞ்ஞானம் விண்ணை முட்டியிருக்கும் இந்த நாட்களிலே கூட, அற்புத சுகம் என்று பொய்யாக விளம்பரம் செய்தால் கூட கூட்டம் வாயைத் திறந்து கொண்டு அலைமோதுகிறதை நாம் பார்க்கிறோம். அப்படியானால், அந்த நாட்களில் அவரால் நடப்பிக்கப்பட்ட அற்புதங்களுக்கு எவ்வளவு பவிசும், மவுசும் இருந்திருக்குமென்று எண்ணிப்பாருங்கள்! இதுபற்றி மத்தேயு ஆசிரியர், அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித

வியாதிகளையும், வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், சந்திரரோகி களையும்; திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர்களைச் சொஸ்தமாக்கினார். கலிலேயாவிலும் தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து அவருக்குப் பின்சென்றார்கள் (மத். 4:24,25) என்று எழுதிக் கொடுத்துள்ளார். ஆக, இவருடைய கீர்த்தி பெலஸ்தீனா தேச மெங்கும் கொடி கட்டிப் பறந்திருக்கிறது ''. இப்படித் திக்கெட்டும் போர் முரசு கொட்டிய ஊழியம் பற்றி, இது ஒரு மூலையிலே நடந்த ஒன்று என யாராவது சொல்ல முடியுமா?.

இன்னும், அவர் தன்னுடைய ஊழியத்தின் நாட்களில் மரித்தவர்களையும் உயிரோடே எழுப்பினார்''. ஆம், கண்ணீரும் கம்பலையுமாகத் தன் முன் வந்து நின்ற நாயீன் ஊர் விதவையின் மகனையும் (லூக். 7:14), தலைவன் ஒருவனுடைய மகளையும் (மத். 9:18,23), மரித்து நான்கு நாளாகி நாற்றமெடுத்த நிலை யிலிருந்த பெத்தானியா ஊரானாகிய லாசருவையும் உயிரோடே எழுப்பினார் (யோவா. 11:43). மரித்தவர்களை உயிரோடே எழுப்பின செய்தியை யாராவது மூடி போட்டு மறைக்க முடியுமா? காட்டுத் தீபோலல்லவா பரவியிருக்கும். இதற்கு மேலாக, அவருடைய ஊழியமும், வாழ்க்கையும் ஒரு மூலையிலே நடந்த காரியம் அல்ல என்பதற்கு, அவருடைய மரணமும் உயிர்த்தெழுதலும் ஒரு பலமான சான்று. ஆம், இயேசு சிலுவையிலறையப்பட்டு பிதாவின் கைகளில் ஆவியை ஒப்புக்கொடுக்கும் முன்பாக பூமியெங்கும் அந்தகாரண்டாயிற்று (லூக். 23:44) பகலிலே திடீரென இருளாகும் போது, ஏன் இப்படி என்ற பயம் கலந்த கேள்வி எங்கும் எழுந்திருக்கும் தானே! அதற்கான பதிலை எல்லாரும் பெற்ற பின்தானே அமைதியடைந்திருப்பார்கள். ஏன் இப்படி என்ற பயம் கலந்த கேள்வி எங்கும் எழுந்திருக்கும் தானே!

அதுபோல் தான் அவருடைய உயிர்த்தெழுதலும். எப்படியெனில், எம்மாவுக்கு நடந்து சென்ற சீடர்களில் ஒருவன், கூட வருவது இயேசு என்று தெரியாமல், '.....இந்நாட்களில் எருசலேமில் நடந்த வைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான் (லூக். 24:18). அந்தளவு அவருடைய உயிர்தெழுதல் பிரபலம்.

இப்பஐ பூமியெங்குள்ளவர்கள் அனைவரும் அறியும்படியாக நடந்த இயேசுவின் ஊழியம் பற்றி நீங்கள் எந்தளவு அறிந்து வைத்துள்ளீர்கள்? இயேசுவை தேவன் ஒரு நோக்கத்தோடு பூமிக்கு அனுப்பிக் கொடுத்தார் என்பதும், அந்த இயேசு தன்னை அனுப்பின பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படியானதொரு ஊழியத்தைச் செய்தார் என்பதும் உங்களுக்குத் தெரியுமா? இல்லையா? தெரியுமானால், அந்த ஊழியத்திற்கான பலனை உங்கள்

வாழ்க்கையில் பெற்று விட்டீர்களா? ''பாவிகளை இரட்சிக்க இயேசு வந்தார் என்று வசனம் சொல்லுகிறதே [1தீமோ. 1:15] அப்படியானால், பாவ மன்னிப்புக்கென்று நீங்கள் இரட்சிப் படைந்து விட்டீர்களா?

## III. **கர்த்தருடைய சபையின் ஆரம்பம் ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல**.

இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல'' என்ற தலைப்பின் கீழாக நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், கிறிஸ்துவின் சபையின் ஆரம்பம் ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல என்பது.

இன்றைக்கு அநேகரிடம் இயேசுவாலே வாக்களிக்கப்பட்டு [மத். 16:18] தம்முடைய இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த [அப். 20:28] சபையைக் குறித்துப் பேசினால், ஏதோ இந்தச் சபையின் ஆரம்பம் ஒரு மூலையிலே நடந்த ஒரு சம்பவம் போல கிறிஸ்துவின் சபை பற்றி நாங்கள் கேள்விப்பட்டதே இல்லையென்று கூறுகின்றனர். அப்படிக் கூறுவது ஆன்மீகக் காரியங்களில் அவர்களுக்குள்ள அறியாமையை வெளிப்படுத்துகிறதென்பது கூட அவர்களுக்குப் பாவம் தெரியவில்லை!

மத உலகில், இன்றைக்கு எப்படித் தங்களைப் பெரிய மனிதர்கள் என்று கூறிக் கொள்ளும் அநேகருக்குக் கிறிஸ்துவால் கட்டப்பட்ட ஒன்றான மெய்ச் சபை விளங்காமலிருக்கிறதோ அது போலத்தான், அன்றைக்கு அரியணையில் வீற்றிருந்த அகிரிப்பா வுக்கும் புரியாத ஒன்றாகவே இருந்துள்ளது. புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றைப் புரியாமலிருந்த அகிரிப்பாவும், அவனோடிருந்தவர்களும் புரிந்து கொள்ளும்படியாகவே, இது ஒரு மூலையிலே நடந்த காரியம் அல்ல என்று அழுந்தக் கூறினார் பவுல்.

இதை வாசிக்கும் அன்பானவர்களே! அகிரிப்பா இருக்கட்டும், இப்பொழுது உங்களைப் பார்த்துக் கேட்கிறேன், கிறிஸ்துவின் சபையை நீங்கள் அறிந்தும், புரிந்தும் வைத்துள்ளீர்களா? ஒருவேளை, நீங்கள் அறியாமலிருந்தால் அதுபற்றிக் கூறுகிறேன் கொஞ்சம் கவனியுங்கள். இச்சபை இயேசு பரமேறிய பின் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில், எருசலேம் பட்டணத்தில் ஆரம்பமாகியிருந்தாலும் [அப். 2ம் அதி], உண்மையில் இதுபற்றிய காரியங்கள் பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே வெளிப்படத் துவங்கி விட்டது. கிறிஸ்துவால் கட்டப்பட்ட சபை குறித்து சுமார் 700 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஏசாயா தீர்க்கன், கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுடியில் ஸ்தாபிக்கப்

பட்டு மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்'' என்று கூறியுள்ளார். (ஏசாயா2:2) தானியேல் தீர்க்கனோ, அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார் என்று சொல்லியுள்ளார் (தானி 2:44). இவர்கள் சொன்னது தான், அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் அப்படியே நிறைவேறியுள்ளது. கிறிஸ்துவின் சபை, ஏதோ நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த ஒரு காளானல்ல. அல்லது, இருக்கின்ற நூற்றுக்கணக்கான பிரிவினை சபை கூட்டங்களில் இதுவும் ஒன்றல்ல.

கிறிஸ்துவின் சபை, தேவனால் திட்டமிடப்பட்டு (எபேசி 3:9-11) பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்களால் முன்னுரைக்கப்பட்டு (ஏசாயா 2:2), யோவான் ஸ்நானகனால் பிரசங்கிக்கப்பட்டு (மத்தேயு 3:17) இயேசுவாலே வாக்களித்துக் கட்டப்பட்டு, (மத்தேயு 16:16-18; அப். 2ம் அதி) பெந்தெகொஸ்தே நாளில், எருசலேம் பட்டணத்தில் 17 தேசத்தார் கூடியிருந்த போது மகத்தான முறையில் ஆரம்பமா கியுள்ளது. அன்று, ஆயிரக்காணக்கானவர்கள் கூடியிருந்த ஒரு பெரிய கூட்டத்தில் பேதுரு செய்த பிரசங்கத்தைக் கேட்டு 3000 பேர் இரட்சிக்கப்பட்டுள்ளனர் (அப். 2:41).

வேத வசனங்களின்படி உண்மை இதுவாக இருக்கும் போது, கிறிஸ்துவின் சபை பற்றி எனக்குத் தெரியாது என்று ஒருவர் எப்படிச் சொல்ல முடியும்? அப்படிச் சொல்வதற்கு **கிறிஸ்துவின் சபையின் ஆரம்பம் என்ன ஒரு மூலையிலே நடந்த காரியமா?** நிச்சயமாக அப்படி இல்லை. கிறிஸ்துவின் சபை வேத வசனங்களின் ஒட்டுமொத்த நிறைவேறுதல். இதிலே யாருக்கும் எந்தச் சந்தேகம் வேண்டாம். அப்படிச் சந்தேகப்படுவீர்களானால், பரலோகம் உங்களுக்கு சந்தேகமாகி விடும். இது உண்மை!

அருமையானவர்களே, இப்படிப்பட்ட கிறிஸ்துவின் சபையில் நீங்கள் அங்கமாக இல்லையானால், அகிரிப்பாவும், பெஸ்துவும், பேலிக்ஸ்ம் எங்கே சென்றார்களோ அங்கே நீங்களும் செல்ல நேரிடும். வேண்டாம், வேண்டாவே வேண்டாம். இன்றே, கிறிஸ்துவால் கட்டப்பட்ட சபையில், விசுவாசித்து (எபி. 11:6), மனந்திரும்பி (2 கொரி. 7:10), அறிக்கையிட்டு, (அப். 8:37) பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று (அப். 22:16), கர்த்தராலே சபையில் சேர்க்கப்படுங்கள். மறுமையை தேவாதி தேவனோடு கழியுங்கள். ஆமென்! ✝

# கிறிஸ்தவம் ஓரு அந்நிய மார்க்கமா?

Bro. J.C. **சோட்**

**கி**றிஸ்தவம் ஓர் அந்நிய மதம் என்றும், அது மேற்கத்திய மதம் என்றும் சொல்வதை நாம் கேள்விப்படுகிறோம். இன்னும் சிலர் இது ஒரு வெள்ளைக்கார மதமென்றும் சொல்லக் கேட்கிறோம். நிச்சயமாகவே இப்படிச் சொல்லுகிறவர்கள் எல்லாருமே கிறிஸ்துவின் பகைஞர் தான். அப்படிப்பட்டவர்கள் கிறிஸ்தவம் எங்கேயிருந்து வந்ததென்பது குறித்தும், அது யாருக்கானது என்பதைக் குறித்தும் அறிவில்லாதிருக்கிறார்கள். இவர்கள் இவ்விதமான பிரச்சாரத்தின் மூலம் உணர்வுகளைத் தூண்டி கிறிஸ்தவத் திற்கு எதிராகத் தவறான அபிப்பிராயத்தைப் பரப்பி விடுகிறார்கள்.

இந்தக் காரியங்களைக் குறித்து உண்மையை அறிந்தவர்கள், கிறிஸ்து எருசலேம் அருகில் உள்ள பெத்லகேமில் பிறந்தவர் என்பதை அறிவார்கள். பெத்லகேம் மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றில் இருக்கிறது (மத்தேயு 1,2). கிறிஸ்தவின் போதனைகள், அவருடைய மரணம், அடக்கம், உயிர்தெழுதல், பரமேறுதல், பின்பு எருசலேமில் சுவிசேஷப் பிரசங்கம். அதன் விளைவாக ஏறக்குறைய மூவாயிரம் பேர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, சபை ஸ்தாபிக்கப்பட்ட முதல் நாளிலேயே சபையிலே கர்த்தரால் சேர்க்கப்பட்டார்கள். அந்நாளிலிருந்து கிறிஸ்துவின் மார்க்கமாகிய கிறிஸ்தவம் உலகெங்கிலும் பரவத் தொடங்கியது. கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகக் கிறிஸ்தவம், அதன் போதனை மற்றும் நற்கிரியைகள் மூலமாகத்தான் உலகெங்கும் அறியப்பட்டு ஏற்றுக் கொள்ளபட்டிருக்கிறது.

கிறிஸ்தவம் ஒரு போதும் ஒரு குறிப்பிட்ட பகுதியையோ அல்லது ஒரு குறிப்பிட்ட மக்களையோ சார்ந்ததாக இருக்கவில்லை. இம்மார்க்கம் அனைத்து மக்களுக்காகவும் அக்கறைப்படும் மார்க்கமாக இருப்பதால் இது எல்லோருக்குமானது.

கிறிஸ்தவம் உலகின் மேற்கத்திய நாடுகளில் ஏன் பிரதானமாகத் திகழ்கிறது என்றால், அங்கே ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு விசுவாசித்து கீழ்ப்படித்ததின் காரணமாகக் கிறிஸ்தவரானார்கள். ஆனாலும், மேற்கத்திய நாடுகளில் புதிய ஏற்பாட்டில் நாம் காணும் தூய கிறிஸ்தவத்தைக் காண முடியாது. அங்கே கிறிஸ்தவம் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்துவிட்டது. காரணம், மனித உபதேசங்களையும் இணைத்து பிரிவினைவாத உபதேசங்களையும், அதைச் சார்ந்த பெயர்களையும் தாங்கிய சபை

இன்றைய நாட்களில் புதிய ஏற்பாடு புத்தக வடிவத்தில் நம் கைகளில் தவழ்கிறது. கிறிஸ்து தாமே அதிலுள்ள வசனங்களை விதை என்று விவரிக்கிறார் [லூக்கா 8:11]. இந்த விதையானது பிரசங்கத்தின் வாயிலாக விதைக்கப்படுகிறது. அதை ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிகிறவர்கள் கிறிஸ்தவர்களாக மாறுகிறார்கள். ஜனங்களுடைய கையில் வேதாகமம் இருக்கிறபடியால், அதை அவர்களாகவே வாசித்து அதின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு செயல்படத்தக்கதாக தெளிவாக இருக்கிறது. ஆகையால், மக்கள் மீது திணிக்கப்படும் மதம் மதிப்பற்றதும், வீணானதுமாயிருக்கிறது. ஒருவருக்கு மதசம்பந்தமாக எப்படி இருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கத் சுதந்திரம் இல்லையென்றால் அவருக்கு சுதந்திரமே இல்லை என்று தான் பொருள். இதினிமித்தம் ஒருவர் கிறிஸ்தவத்தை, ஏற்றுக்கொள்வது நிராகரிப்பதும் அவருடைய விருப்பமாயிருக்கிறது. ஆகவே, ஒருவர் கிறிஸ்தவ மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள விரும்பினால், அவர் அப்படிச் செய்ய இச்சமூகம் அனுமதிக்க வேண்டும். அது தான் உண்மையான சுதந்திரம்.

தூய கிறிஸ்தவத்திற்கு பூமியில் தலைவரும் கிடையாது, தலைமையகமும் கிடையாது. கிறிஸ்துவே தலையாக இருக்கிறார். அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர். எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் [கொலோ.1;எபே.1:22,23]. அவர் பரலோகிலிருந்து நித்தியத்தைஅருளுகிறார். தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் பேகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் [ II பேதுரு 3:19]. அப்போஸ்தலராகிய பவுலும், எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார் என்று சொல்லுகிறார் [II தீமோ. 2:4]. இதினிமித்தம் தான் கிறிஸ்தவத்திற்கு உலகளாவிய ஈர்ப்பு இருக்கிறது. காரணம் கிறிஸ்தவம் தான் தனிமனிதத் தேவைகளை அலசி ஆராய்ந்து அதைச் சந்திக்கிறது.

உருவாகியிருக்கின்றன. இது தேவனுக்கு எவ்விதத்திலும் பிரிய மானதல்ல [ரோமர் 10:17,18]. அவர் விரும்புவதெல்லாம் எல்லோரும் அவருடைய சித்தத்தை ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவர்களாக வாழ்வது தான் [ I பேதுரு 4:16]. மேற்கத்திய நாடுகளில் சிலர் அப்படிப்பட்ட கிறிஸ்தவர்களாக வாழ முயற்சித்துக் கொண்டிருக் கிறார்கள்.

கிறிஸ்தவம் ஆசியாவில், ஆப்பிரிக்காவில் அல்லது ஏதாவதொரு தீவுகளில் தோன்றியிருந்தாலும் சரி, அது மேற்கத்திய நாடுகளில் அதிகமாக இருப்பதற்கான காரணம், இப்பகுதி வாழ் மக்கள் தங்கள் வாழ்க்கையை மாற்றுவதற்கும் தங்களைச் சீர்படுத்தி அடுத்த வாழ்க்கைக்கு ஆயத்தமாகவதற்கும் கிறிஸ்தவம் தான் தலைசிறந்தது என்பதைக் கண்டுகொண்டனர்.

கிறிஸ்தவம் மத்திய கிழக்கு நாடுகளில் தோன்றினபடியால், அப்பகுதியிலிருந்தவர்கள் கிறிஸ்தவத்தை மேற்கத்திய நாடுகளுக்கு எடுத்துச் செனறார்கள். காலப்போக்கில் கிழக்கிலுள்ள கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ மார்க்கத்திலிருந்து விழுந்துபோன படியால், மேற்கத்திய விசுவாசிகள், கிறிஸ்தவத்தை கிழக்கத்திய நாடுகளுக்கு மீண்டும் கொண்டு வந்தார்கள். அதாவது, சுவிசேஷத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் அதைக் கேள்விப்படாதவர்களிடத்தில் கொண்டு சென்றார்கள். காரியங்கள் எப்போதுமே இப்படித் தான் தொன்று தொட்டு நடந்து கொண்டிருக்கிறது. இந்த நடைமுறை உலகம் உள்ள வரை வளர்ந்து கொண்டே தான் இருக்கும்.

நம் கர்த்தர் எல்லா ஜனங்கள் எவ்விடங்களிலும் கிறிஸ்தவராகும்படியான வாய்ப்புக் கிடைக்க வேண்டுமென்று இரட்சிப்பின் திட்டத்தை வடிவமைத்தார். அதனால் தான், அவர் அப்போஸ்தலர்களிடம் இவ்விதமாகக் கட்டளையிட்டார். ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென் [மத்தேயு 28:19,20] மறுபடியும் கிறிஸ்து இவ்விதமாகச் சொன்னார். பின்பு, அவர் அவர்களை நோக்கி நீங்கள் உலகமெங்கம் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று [மாற்கு 16:15,16]. ஆம், உலகம் உள்ளவரை கிறிஸ்தவம் எல்லா ஜனங்களுக்குமானதாகத் தான் இருக்கும். இச்செய்தி உலகம் முழுவதும் போதிக்கப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். சத்தியத்தைப் பகிர்வது என்பது சத்தியத்தை அறிந்த எல்லோர் மீதும் விழுந்த கடமையாயிருக்கிறது.

இவ்வுலகில் யாரும் கிறிஸ்தவத்தை தங்களுக்கு மட்டும் தான் என்றோ கிறிஸ்தவம் ஒரு மேற்கத்திய மதம் என்றோ, கிழக்கத் தியமதம் என்றோ சொல்ல முடியாது. ஏனென்றால், இது எல்லா ஜனங்களுக்குமான உலகளாவிய ஒன்றாக விளங்குகிறது. ஆகை யால், கிறிஸ்தவத்தை ஒரு தேசத்திற்குரியதாகவும், தங்கள் தேவை களைச் சந்திக்கிற தனிப்பட்ட ஒன்றாகவும் கருத முடியாது. ஆம், கிறிஸ்தவம், அதை எடுத்துச் செல்லும் பொறுப்பை எல்லோ ருக்கும் கொடுத்திருக்கிறது.

கிறிஸ்தவ மார்க்கத்தைக் குறித்து நீங்கள் பயப்படவும் வேண் டாம், அதை எதிர்க்கவும் வேண்டாம். அது உங்களையோ, உங்கள் தேசத்தையோ அல்லது ஒரு நபரையோ எவ்விதத்திலும் காயப்படுத் துவது இல்லை. கிறிஸ்துவத்திற்கு அரசியலிலோ, அதிகாரத்தி லோ, அடக்கு முறையிலோ எந்த விருப்பமுமில்லை. கிறிஸ்த வத்தை யார் சுமந்து வருகிறார்களோ அவர்களை வைத்து தீர்ப்பைச் செய்ய வேண்டாம். மாறாக, அதன் போதனைகளைக் கொண்டு தீர்ப்புச் செய்யுங்கள். தீர்ப்புச் செய்வதற்கு முன்பாக அது எதைப் பற்றியது என்பதைக் காண்பதற்காக புதிய ஏற்பாட்டின் பக்கங்களிலே அதைப் படியுங்கள. அப்படிச் செய்தால், நிச்சயமாகவே நீங்கள் உண்மையில் கிறிஸ்தவராக மட்டும் வாழ விரும்புவீர்கள். ✝

## தீத்து

1. பொதுவான விசுவாசத்தின்படி உத்தமகுமாரன் [தீத் 1:1]
2. உண்மையான சகோதரன் [2. கொரி 2:13]
3. பவுலின் கூட்டாளியும், உடன் வேலையாளும் [2 கொரி 8:23]
4. கிறிஸ்துவின் ஆவியையுடையவர், கிறிஸ்துவின் அடிச்சுவடில் நடந்தவர் [2 கொரி 12:18]
5. நற்கிரியைகளுக்கு மாதிரி [தீத் 2:7]

## பெண்கள் பகுதி

# தன் குடும்பத்தை உபசரிப்பதில் ஒரு பெண்ணின்பங்கு''

**Sis. ரேச்சல் நாயகம்**

**அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள். அதனால் சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு** (எபி 13:2) ஆரம்ப காலத்திலிருந்தே இந்த விருந்தோம்பல் என்பது ஒரு கனத்திற்குரிய மற்றும் தன்னலமற்ற குணாதிசயமாக கருதப்படுகிறது

ஒருநாள், ஆபிரகாம் வசித்து வந்த கூடாரத்தின் வழியாக மூன்று மனிதர்கள் கடந்து சென்றார்கள். ஆபிரகாம், அவர்களிடத்தில் ஓடி அவர்களை தன் கூடாரத்தின் அருகில் இருக்கும் மரத்தின் நிழலில் ஓய்வு எடுத்துச் செல்லும்படி மிகவும் வருந்திக் கொண்டான், பின்பு அவன் சாராளிடம், அவர்களுக்கு அப்பம் தயாரிக்குமாறு துரிதப்படுத்தினான். பின்பு, தானே, தன் மந்தைக்குள் சென்று ஓர் இளங்கன்றைக் வேலைக்காரரிடம் - கொடுத்து சமைக்கும்படி கேட்டுக் கொண்டாள். வெண்ணை யையும். பாலையும் எடுத்துக் கொண்டு, தான் அழைத்தவர்கள் சாப்பிடும் வரை, அவர்கள் அருகே மரத்தின் நிழலில நின்று கொண்டிருந்தான். (ஆதி 18ம், அதிகாரம்!)

அந்த முக்கியமான நாளில், ஆபிரகாம் மனித உருவத் திலிருந்த கர்த்தருக்கும், இரண்டு தேவதூதர்களுக்கும் விருந்தளிப் பவனாக மாறினான். (ஆதி 18:13, 19:1. நீண்ட நாளுக்கு முன் வாழ்ந்த அந்த ஆபிரகாம், சாராள் ஆகிய இருவரிடம்' இருந்த உபசரணை நிறைந்த இருதயத்தை புதிய ஏற்பாட்டுக், கிறிஸ்தவர்களும் பெற்றிருக்க வேண்டுமெள எபிரெய ஆசிரியர் வலியுறுத்துகிறார்;

மற்றொரு சமயத்தில் தேவனுடைய தீர்க்கதரிசியான எலிசா, சூனேகுப் போயிருக்கும்போ அங்கேயிருந்த கனம்பொருந்திய ஒரு ஸ்திரீ அவளை போஜனம் பண்ண வருந்திக் கேட்டுக் கொண்டாள் அப்படியே அவன் வருகிறபோதெல்லாம் போஜனம் பண்ணும்படி அங்கே வந்து தங்குவான அவள் தன் புருஷனை நோக்கி நம்மிடத்தில் ''இதோ, எப்போதும் வந்துபோகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன். நாம் மெத்தையின்மேல் ஒரு சிறிய அறை வீட்டைக்கட்டி அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்துவிளக்கையும் வைப்போம். அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம் என்றாள். (2இராஜா 4:8-10), வேலையும் நடந்து முடிந்தது. எலிசாவும், அவன் ஊழியக்காரனாகிய கேயாசியும் எப்பொழுதெல்லாம் அவ்வழியில் கடந்து போனார்களோ அப்பொழுதெல்லாம் இந்த மேல் அறையில் தங்கினார்கள்

தீர்க்கதரிசியாக இருக்கும் எலிசாவின் வாழ்க்கை அவ்வளவு சுலபமானதல்ல. இந்த சூனேமியாள் அவனுடைய சரீரத் தேவைகள் சந்திக்கப்படாதிருந்ததை உணர்ந்தாள். பாகாலின் ஆசாரியர்கள் மூலமாகவும். இஸ்ரவேலின் அரசியல் பகைவர் மூலமாகவும். அவனுடைய வாழ்க்கையில் இருக்கும் அபாயத்தையும் சிரியாவின் ராஜா அவனை கொல்ல எத்தனித்துக் கொண்டிருந்ததையும் ஒருவேளை இந்த சூனேமியாள் அறிந்திருப்பாள் போலும் (2 ராஜா 6:1-23)

ஆனால், அன்பான சூனேமியாளின் இருதயம். எலிசாவின் துன்பவேலையை சற்று சுலபமாக்கும்படியாக இருந்தது. எலிசா தீர்க்கதரிசி அவ்வழியே கடந்து செல்லும்போதெல்லாம் அவனுக்கு உணவு தயார் செய்து கொடுத்ததிலிருந்தும், அவனுடைய வசதிக்கேற்ற அவனுக்காக ஒரு அறையைக் கட்டி அதற்காக செலவு செய்ததிலிருந்தும் நாம் அவருடைய உபசரிப்புத் தன்மையை காணமுடியும்.

இந்த சூனேமியாள் தேவனுக்கு பயப்படுபவளும், உபசரிப்பதில் சிறந்தவளுமாத்திரமல்ல, ராஜாக்களின் புட;தகத்தை எழுதிய ஆசிரியர் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு அவளைப் பற்றிக் குறிப்பிடும்போது ''விசேஷித்தவள் அல்லது ''கனம் பொருந்திய வள் என்று குறிப்பிகிறார். எவ்வளவு பாராட்டுதற்குரிய வார்த்தைகள் பாருங்கள்! அவளை வர்ணிக்கிற இந்த அரிய குணங்களை, இன்றைக்கும் தேவனுடைய குடும்பத்தில் அங்கமாக இருக்கும் ஒவ்வொரு பெண்ணும் வளர்த்துக் கொள்ள வேண்டும்

இந்த சூனேமியாளிடமிருந்து இன்னும் நாம் என்ன குணங்களை கற்றுக் கொள்ள முடியும்? அவள் ஒரு பணிவுள்ள ஸ்திரீ அவள் செய்த மகா உதவிக்கு என்ன கைம்மாறு செய்ய வேண்டும். என்று கேட்கும்படி அவளை எலிசா அழைத்தனுப்பிய போது அவனுடைய தனிமையான அந்த அறைக்குள் செல்லவேண்டும் என்று அவள் எண்ணம் கொள்ளவில்லை. 2) ராஜா 4:15 இதைப்பற்றிக் கூறும்போது. ''அவளை கூப்பிட்டபோது அவள் வந்து வாசற்படியிலே நின்றாள்'' என்ன ஒரு பணிவும், ஞானமும் அவள் குணத்தில் உள்ளது என்று பாருங்கள்!

மேலும், தேவன் மீது அபார நம்பிக்கையையும் தேவனுடைய மனிதனாகிய எலிசாவின் வார்த்தையின் வல்லமையையும் தீர்க்கதரிசனம் சொன்னதின்படியாகவே அவளுக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டான். (2 ராஜா 4:17), ஆனால் காலப்போக்கில் அவன் திடீரென்று வியாதிப்பட்டு, மரித்துப் போனான். இந்த சூனேமியாள் என்ன செய்தாள்? தனக்கு வந்த துயரத்தை நினைத்து அழுது புலம்பினாளா? இல்லை. எதிர் பாராமல், தீடீரென்று தேவனுடைய மனிதனை சந்திக்க நீ ஏன் பிரயாணப்படுகிறாய் என்று அவள் கணவனே கேட்டபொழுது,

அவள் சர்வ சாதாரணமாக ''எல்லாம் சரி தான் [2 ராஜா 4:23] என்று பதில் தந்தாள். அவள் மிகப் பெரிய விசுவாசமுள்ள ஒரு ஸ்திரீயாக இருந்தாள்.

இன்றைக்கும் கிறிஸ்தவ வாழ்க்கையின் வல்லமை, நம்மை சுற்றி இருப்பவர்கள் மத்தியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது. மற்றவர்கள் நம்மிடமுள்ள உபசரிக்கும் குணம். கனத்திற்குரிய குணங்கள். சுயநலமின்மை, பணிவு, விசுவாசம் இவைகளைக் காணும்போது சுலபமாக அவர்களும் தேவனு டைய வழிக்கு இழுக்கப்படுவார்கள் என்பதில் சற்றும் சந்தேகமில்லை. அருமையானவர்களே, சூனேமியாளைப் போல நாம் இந்த உபசரிப்பு குணத்தை பெற்று தேவனுக்கு பெருமையையும், புகழையும் சேர்ப்போம். ஆமென்! ✝

## ஞானஸ்நானம் பெறாமல் முடியாதவைகள்

1. **கிறிஸ்துவின் கட்டளைக்கு கீழ்ப்படிய முடியாது (மத் 28:19)**
2. **இரட்சிப்படைய முடியாது (மாற்கு 16:16)**
3. **இராஜ்யத்தில் (சபை) பிரவேசிக்க முடியாது (யோவா 3:3-6)**
4. **பாவ மன்னிப்பு பெற முடியாது (அப் 2:38)**
5. **பாவங்கள் கழுவப்பட முடியாது (அப் 22:16)**
6. **புதிய வாழ்க்கை தொடங்க முடியாது (ரோமர் 6:4)**
7. **ஒரே சரீரத்தில் அவயவமாய் இருக்க முடியாது (1 கொரி 12:13,14).**
8. **கிறிஸ்துவை தரித்துக்கொள்ள முடியாது (கலா 3:27)**

# தேவன் நடத்துவார்

Dr. ஏபில் நாயகம்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். சரீரத்திலும், ஆவியிலும் சுகமாக இருக்கிறீர்கள் என்று விசுவாசிக்கிறேன். தேவனுடைய பிறைகளுக்கு கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசிர்வாதங்களும் உண்டு என்று எபேசியர் 1:3 ல் வாசிக்கிறோம். அதுமட்டுமல்ல, சரீர வாழ்க்கைக்கு தேவையான ஆசீர்வாதங்களும் நமக்கு வாக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தேவன் ஒன்றை வாக்களித்துள்ளார் என்றால் அதை நிச்சயம் நாம் பெற்றுக்கொள்ள முடியும். பெற்றுக் கொள்வதற்கு நம்மிடம் சில தகுதிகள் தேவைப்படுகிறது. அதாவது, தேவன் வாக்களித்திருக்கிறார் என்பதற்காக ஒருவன் எப்படிப்பட்டவராயிருந்தாலும் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ள முடியும் என்ற எண்ணம் தவறானது.

யோசுவாவின் தலைமையின் கீழ் இருந்த இஸ்ரவேலர்களுக்கு தேவன் ஒரு வாக்கு கொடுத்தார். யோசுவா 1:3 ல் **உங்கள் காலடி மிதிக்கும் அவ்விடத்தையும் கொடுத்தேன். ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாகும்.** இஸ்ரவேல் ஜனங்கள் கானானை சுதந்தரிப்பார்கள் என்று தேவன் யோசுவாவிற்கு வாக்களிக்கிறார். **கொடுத்தேன்** என்று வாக்கு முதலாம் அதிகாரத்தில் உள்ளது. யோசுவா 21:45 ல் கர்த்தர் சொன்ன நல்வார்த்தைகள் எல்லாம் நிறைவேறினது என்று பார்க்கிறோம்.

ஆக, முதலாம் அதிகாரத்திற்கும் 21 ஆம் அதிகாரத்திற்கும் இடையே என்னென்ன காரியங்கள் நடந்தது நாம் பார்க்கும் போது, வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொள்ள தேவன் யோசுவா 1:3 ல் கொடுத்தேன் என்று வாக்களித்துவிட்டார் என்பதற்காக ஜனங்களின் தகுதியை பார்க்காமல் அவர் கானான் தேசத்தைக் கொடுத்தாரா? நிச்சயமாக இல்லை. அப்படியானால், நாமும் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள சில தகுதிகளை பெற்றுக் கொள்ள வேண்டும். யோசுவாவின் புத்தகம் நமக்கு இந்தப் பாடத்தைக் கற்றுத் தருகிறது.

இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்துவதற்காக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட யோசுவாவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவோம் என்று ஜனங்கள் தீர்மானித்தார்கள். யோசுவா முதலாவது அதிகாரம், வசனம் 16 வாசிக்கும் பொழுது 'அப்பொழுது

அவர்கள் யோசுவாவுக்கு பிரதியுத்தரமாக நீர் எங்களுக்கு கட்டளையிடுகிறது எல்லாம் செய்வோம். நீர் எங்களை அனுப்பும் இடமெங்கும் போவோம்' என்று சொன்னதாக நாம் வாசிக்கமுடியும். தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள் வதற்கு அடிப்படையாக தேவைப்படுகிற ஒரு காரியம் தேவ னுடைய வார்த்தைகளுக்கு செவி கொடுப்பதாகும். தேவனுடைய வார்த்தைகளுக்கு நாம் செவி கொடுக்காமல், தேவனுடைய மனிதர்களால் சொல்லப்படும் வார்த்தைகளுக்கு நாம் செவி கொடுக்காமல், தேவனுடைய ஆசீர்வாதங்களை ஒருபோதும் பெற்றுக்கொள்ள முடியாது. இந்த எளிதான உண்மையை பலர் புரிந்து கொள்வதில்லை. தேவனுடைய ஆசீர்வாதம் எனக்கு வாக்குத்தத்தம் ஆக கொடுக்கப்பட்டிருக் கிறது, எனவே தேவனுடைய வார்த்தைகளுக்கு நான் கீழ்ப் படியாமல் இருந்தாலும் கூட அந்த ஆசீர்வாதங்களை நான் பெற்றுக் கொள்ள முடியும் என்று நம்புகிறார்கள். வேதாகமத்தில் இடம்பெற்றிருக்கும் ஏறக்குறைய அனைத்து ஆசீர்வாதங்களும் நிபந்தனைகளோடு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்த நிபந்தனைகளுக்கு உட்படாமல் ஆசீர்வாதங்களுக்கு மட்டும் நாம் சொந்தக்காரர் ஆகிவிட முடியாது. மத்தேயு 6:33 ல் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூட கொடுக்கப் படும்' என்று வாசிக்கிறோம். இதுவும் நிபந்தனையோடு இருக்கும் ஆசீர்வாதமே. எனவே, தேவனுடைய வார்த்தைகளுக்கு செவி கொடுக்காமல், வசனங்களின் படி நடவாமல் நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை பெற்றுக்கொள்ள இயலாது.

இரண்டாவதாக, நாம் பார்க்கும்பொழுது, தேவனை அவர்கள் முழுமையாக சார்ந்து இருந்தார்கள். யோசுவா நான்காம் அதி காரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் யோர்தானைக் கடந்து வந்தார்கள் என்று நாம் பார்க்கிறோம். மோசேயின் காலத்தில் செங்கடலை பிளந்து ஜனங்களை வழிநடத்தியது போல யோசுவாவின் காலத்தில் தேவன் யோர்தான் நதியைக் வெட்டாந்தரை வழியாய் கடந்து வர செய்தார். இஸ்ரவேல் ஜனங்கள் யோர்தானைக் கடந்து வந்து விட்டார்கள் என்று எமோரியாவின் சகல ராஜாக்களும் கானானிய ரின் சகல ராஜாக்களும் அறிந்த பொழுது அவர்கள் சோர்ந்து போனார்கள். இஸ்ரவேல் ஜனங்களின் நிமித்தமாகவும் அவர்களை வழி நடத்தி கொண்டு வந்த தேவன் நிமித்தமாகவும் அவர்களுடைய இருதயம் கலங்கியது. அதைத் தொடர்ந்து என்ன நடந்தது என்று நாம் வாசிக்கும் பொழுது, சற்று வியப்பாகவே இருக்கும். ஐந்தாம் அதிகாரம் இரண்டாம் வசனத்தை வாசிக்கும் பொழுது கர்த்தர் யோசுவாவை நோக்கி இஸ்ரவேல் புத்திரருக்கு விருத்த சேதனம் பண்ண வேண்டும் என்று கட்டளையிட்டார்.

தேவனுடைய வழிநடத்துதல் பல நேரங்களில் நமக்கு வியப்பைத் தருகிறது. கானான் தேசத்தை சுதந்தரமாக்க வேண்டும். அப்படி சுதந்தரமாக்க வேண்டுமானால், அதன் ராஜாக்களை முறியடிக்க வேண்டும். அப்படியானால் போர் செய்வதற்கு எந்த நேரத்திலும் இஸ்ரவேல் ஜனங்கள் அதிலும் குறிப்பாக இஸ்ர வேலின் புத்திரர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும். ஆனால், தேவன் இங்கே அவர்களுக்கு விருத்தசேதனம் செய்ய வேண்டும் என்று யோசுவாவுக்கு கட்டளையிடுகிறார். பொதுவாகவே, விருத்த சேதனம் என்பது ஒரு அறுவை சிகிச்சைக்கு ஒப்பானது. அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்று வரும்பொழுது, அதற்கான ஆயத்தம் தேவை. அதுமட்டுமல்ல, அறுவை சிகிச்சை முடிந்து போதிய ஓய்வும் தேவை. இது நம்முடைய எண்ணம். எனவே, போருக்காக ஆயத்தமாக இருக்கும் ஒரு ஒரு ஜன கூட்டத்திற்கு விருத்தசேதனம் செய்வதென்பது சிறந்த முடிவல்ல என்று நாம் நினைப்போம். ஆனால், தேவன் இப்படிப்பட்ட ஒரு நேரத்தை தான் இஸ்ரவேல் புத்திரர் விருத்தசேதனம் செய்து கொள்வதற்காக தெரிந்து கொண்டார். ஆனால், அந்த ஜனங்கள், தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து விருத்தசேதனம் பெற்றுக் கொண்டார்கள்.

அது மட்டுமல்ல வசனம் 8 இல், ‘ஜனங் களெல்லாரும் விருத்தசேதனம் பண்ணப்பட்டு தீர்ந்த பின்பு அவர்கள் குணமாகும் மட்டும் தங்கள் தங்கள் இடத்திலேயே பாளையத்தில் தரித்து இருந்தார்கள்‘ என்று வாசிக்கிறோம். தேவனை முழுமையாக அவர்கள் சார்ந்து இருந்தார்கள். கானான் தேசத்தை கொடுப்பேன் என்று தேவன் சொல்லியிருக்கிறார். கொடுப்பது அவருடைய வேலை, அவருக்கு செவி கொடுப்பது எங்களுடைய வேலை என்ற மனப்பான்மையோடு தேவன் மீது அவர்கள் சார்ந்து இருந்தார்கள். இஸ்ரவேல் ஜனங்களின் நிமித்தம் கானானை சுற்றி யிருந்த ராஜாக்கள் கலங்கும் வண்ணம் தேவன் பின்னணியிலே கிரியை செய்தார். ஆம், பிரியமானவர்களே, நாம் தேவன் மீது சார்ந்து இருக்கும் பொழுது, அவர் நமக்காக, நம்நிமித்தமாக கிரியை செய்கிறார். தேவன் மீது முழுமையாக சார்ந்து இருப்பது என்பது சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும் நம்முடைய அறிவிற்கு அது எப்படி தோன்றினாலும், அதைப்பற்றி நாம் கவலைப்படாமல் தேவனுடைய வார்த்தைகளுக்கு ஏற்றபடி நம்முடைய கிரியைகளை செய்வதாகும். எனவே, நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள நாம் செய்ய வேண்டிய காரியம், தேவனைச் சார்ந்து இருப்பது மட்டுமே. நாம் தேவன் மீது சார்ந்து இருப்போம் என்று சொன்னால் நிச்சயமாக அவருடைய கட்டளைகளுக்கு கீழ்பட்டவர்களாக இருப்போம்.

மூன்றாவதாக, மகா பட்டணம் ஆகிய எரிகோவை வீழ்த்தி, கானானை நோக்கி செல்லும் வழியில் சிறிய பட்டணம் ஆகிய ஆயி பட்டணத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் தோற்றுப் போனார்கள்.

அதற்கான காரணம், பாவம். எரிகோ பட்டணத்திலே உள்ள யாவும் கர்த்தருடைய பார்வையில் சாபமாக இருக்கும் என்று யோசுவாவிடம் சொல்லப்பட்டது. ஆனால், ஆகான் என்ற மனிதன் தேவன் சாபத்தீடு என்று சொன்ன காரியங்களில் சிலவற்றை எடுத்துக் கொண்டான். இந்த ஒரு மனிதன் நிமித்தமாக தேவனுடைய கோபம் இஸ்ரவேல் அனைத்தின் மீதும் வந்தது. வாக்குத்தத்தத்தின் நிறைவாக பெற்றுக்கொள்ளப் போகும் கானானை சுதந்திர த்திற்கு தடையாக ஆயி பட்டணத்திலே இஸ்ரவேல் புத்திரர் தோற்றுப் போனார்கள். ஒரு மனிதனுடைய பாவம் இஸ்ரவேலின் மொத்தத்திற்கும் பாவமாக தேவனாலே பார்க்கப்பட்டது. ஏழாவது அதிகாரம் 26 ஆம் வசனத்தில் கர்த்தர் தமது கோபத்தின் உக்கிரத்தை விட்டு மாறினார் என்ற வசனம் இருப்பதை வாசிக்க மு டியும். எப்பொழுது என்று பார்க்கும்பொழுது அந்த பாவம் களையப்பட்ட பொழுது. இதில் இருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம், ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்வதற்கு பாவம் ஒரு தடைக் கல்லாக இருக்கிறது. அந்த பாவத்தை நாம் களையாத பட்சத்தில், நாம் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வதற்கு அது தடையாக இருக்கிறது. இந்த மூன்று மு க்கியமான பாடங்களை நாம் யோசுவா வின் புத்தகத்திலிருந்து கற்றுக்கொள்ள முடியும். கானான் தேசத்தை தருவேன் என்று தேவன் வாக்கு கொடுத்தார். அந்த ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்வதற்கு ஜனங்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிய வேண்டியதாக இருந்தது. இரண்டாவது, அவர்கள் தேவனை சார்ந்து இருக்க வேண்டியதாக இருந்தது. மூன்றாவது, தங்களிடமிருந்த பாவத்தை நீக்க வேண்டி யதாக இருந்தது.

பிரியமானவர்களே, யோவான் 14 ஆம் அதிகாரத்தில், இயேசு கிறிஸ்து சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன் என்று சொன்னார். அப்படியானால் அந்த சமாதானம், நமக்கு வாக்குத்தத்த மாக கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த சமாதானம் இன்று அனைவருக்கும் கிடைப்பதில்லை. ஏன் என்று நாம் சிந்திக்கும் பொழுது, நிச்சயமாக குறைகள் நம்மிடம் மட்டுமே இருக்க வாய்ப்புள்ளது. ஏனென்றால், வாக்குதத்தம் பண்ணினவர் உண்மை உள்ளவராக இருக்கிறாரே. அப்படி என்று சொன்னால் நம்மிடம் இருக்க வேண்டிய சில குணாதிசயங்களை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். தேவன் எதிர்பார்க்கிற ஒரு வாழ்க்கையை நாம் வாழும் பட்சத்தில் இன்றைக்கு உரிய ஆசீர்வாதத்தையும், பரம கானானாகிய மறுமையும் தருவதற்கு தேவன் சித்தம் உள்ளவராக இருக்கிறார். தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல், அவரை சாராமலும், பாவங்களை களைந்து போடாமலும் இருந்தால், நாம் வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொள்ள முடியாது. தேவனுக்கு பிரியமான வாழ்க்கையை வாழ்வோம்! பரம கானானை சுதந்தரிப்போம்!! தேவன் தாமே நம்மை வழி நடத்துவாராக. ஆமென்! ✝

சிறுவர் பகுதி

# ஜெபம்

Dr. பிரெய்ஸி

ஹாய் குட்டீஸ், நீங்களெல்லாரும் தினமும் வேதத்தை வாசித்து நல்ல பிள்ளைகளாயிருப்பீர்களென்று நம்புகிறோம். இம்மாதம் நாம் ஜெபத்தைப்பற்றி பார்க்கப் போகிறோம். நீங்கள் தினமமும் ஜெபிக்கிறீர்களா? தினமும் ஜெபிப்பது அவசியமா?

அருமையான பிள்ளைகளே, நாம் தேவனுடைய பிள்ளைகளென்றும் நம் வாழ்வில் கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டுமென்றும் முதலில் அறிந்து கொள்ள வேண்டும் [எபேசியர் 5:1-2]. எனவே, கீழ்க்காணும் உதாரணங்களைக் கொண்டு இயேசு எப்படி ஜெபித்தார் என்று நாம் பார்பபோம். மாற்கு 1:35 ல் இயேசு **அதிகாலையில் எழுந்து ஜெபம் பண்ணினார்** என்று பார்க்கிறோம் மத்தேயு 14:23, மாற்கு 6:46, லூக்கா 6:12, லூக்கா 5:16] போன்ற வசனங்களிலும் நாம் இதைக் காணலாம். மத்தேயு 14:19ல் இயேசு **சாப்பிடுவதற்கு முன்பாக நன்றி செலுத்துவதையும்,** ஜெபிப்பதையும் நாம் காண முடியும். மத்தேயு 26 மற்றும் மாற்கு 14 போன்ற அதிகாரங்களில் பாடுகள் தம்மை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும் ஆகிலும் தம்முடைய சித்தத்தின் படியல்ல, **பிதாவின் சித்தத்தின் படியே ஆகக்கடவது என்று ஜெபிப்பதை** நாம் காண முடியும். மேலும், நாம் இயேசு பாடுகளை அனுபவித்துக் கொண்டிருந்தபோதும் தம்மை **துன்பப்படுத்தியடிகளுக்காகவும் ஜெபித்தார்** [லூக்கா 23:34] அதேபோல் அவர் தம்முடைய **நண்பர்களுக்காகவும்** ஜெபித்ததைக் காணலாம் [யோவான் 17:1-25].

அருமையான குழந்தைகளே, நாம் பிதாவினிடத்தில் இயேசு மூலமாக ஜெபிக்கும்போது இயேசு நமக்காகப் பரிந்து பேசுகிறதாகவும், நமக்கும் தேவனுக்கும் இடையே மத்தியஸ்தராகவுமிருக்கிறார் [எபிரெயர் 7:25; ரோமர் 8:34]. எனவே, பிள்ளைகளே, கிறிஸ்துவைப்பற்றி அவருக்குள் ஜெபத்துடன் வாருங்கள். தினமும் உங்கள் நண்பர்களுக்காக, உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காக உங்கள் ஆசீர்வாதங்களுக்காக, உங்களுக்காக ஜெபியுங்கள்.

அதிக அன்புடன்
ப்ரைசி அக்கா!

## கேள்விகள் :

1. நாம் எப்படி ஜெபிக்க வேண்டும்?
2. நாம் யாரிடம் ஜெபித்துக் கொண்டிருக்கிறோம்?
3. யார் மூலமாக நாம் ஜெபித்துக் கொண்டிருக்கிறோம்?
4. நாம் எப்போது ஜெபிக்கிறோம்?
5. இன்றுமுதல் நீங்கள் எப்படி ஜெபிக்கப் போகிறீர்கள்?

---

# நாளும், நடப்பும்

1. நாடு முழுவதும் மாணவர்கள் 17-07-2022 அன்று மருத்துவப் படிப்புகளுக்கு நீட் தேர்வு எழுதினர்!
2. 18 மாதங்களில் மக்களுக்கு 200 கோடி தடுப்பூசி செலுத்தி சாதனை.
3. இலங்கை நெருக்கடி. கடனில்லாத நாடு வேண்டும். 100 வது நாள் போராட்டத்தில் மக்கள்.
4. இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரை கைப்பற்றியது இந்தியா.
5. பருவமழை காரணமாக மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவை எட்டியது. விவசாயிகள் மகிழ்ச்சி.

# நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து

**அ**ப்போஸ்தலனாகிய பவுல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை **நம்முடைய ஜீவன்** என்று குறிப்பிடுகிறார் (கொலோசெயர் 3:4). பவுலைப் பொறுத்தவரை கிறிஸ்து அவருடைய ஜீவன் என்று சொல்கிறார் (பிலிப்பியர்1:21). பவுலுக்குள் கிறிஸ்து வாழ்ந்தார். (கலாத்தியர் 2:20) கிறிஸ்து உங்கள் சரீரத்தில் மகிமைபடுகிறாரா? (பிலிப்பியர் 1:20). பவுல் பல சந்தர்ப்பங்களில் கிறிஸ்து நமக்குள் இருப்பதின் முக்கியதுவத்தைப்பற்றி எழுதியிருக்கிறார் (கொலோ 1:27 ; II கொரிந்தியர் 13:5). கிறிஸ்து நம் ஜீவனாக இருக்கும்போது அதில் உள்ளடங்கிய காரியங்களை நாம் சற்று கவனிப்போம். இந்த காரியங்கள் நம் ஜீவியங்களில் வெளிப்படையாகக் காணப்பட வேண்டும்.

**கர்த்தரைப்பற்றி நினைத்துக்கொண்டும், படித்துக்கொண்டும், தியானித்துக்கொண்டுமிருத்தல்**

நாம் நம் இருதயங்களில் சில காரியங்களை ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கும்படியாக உண்டாக்கப்பட்டிருக்கிறோம். நம் இருதயத்தின்விருப்பமெல்லாம் பரலோகத்தை நோக்கித்தான் இருக்கிறது (கொலோ 3:1–3). நாம் நீதியுள்ளவைகளெவைகளோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் (பிலிப்பியர் 4:8). சங்கீதக்காரன் இராச்சமயங்களில் தேவனை தியானிப்பதாகச் சொல்கிறார் (சங்கீதம் 63:67). பவுல் தீமோத்தேயுவுக்கு ஆவிக்குரிய காரியங்களில் தியானமாயிருக்கும்படி அறிவுறுத்து கிறார். (I தீமோத்தேயு 4:15). தேவனுயை வார்த்தைகளை தியானிக்கும்படி அதிக நேரத்தை நாம் ஒதுக்க வேண்டும். நாம் அந்த பெரெயா பட்டணத்து மக்களைப்போல் அனுதினமும் செய்ய வேண்டும் (அப்போஸ்தலர் 17:11).

**கர்த்தர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு கீழ்ப்படிய வேண்டும்.**

கர்த்தருக்கு நம்மீது அதிகாரம் உண்டு (மத்தேயு 28:18 அப்போஸ்தலர் 5: 36).அவருடைய வார்த்தைகள் தான் நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் (யோவான் 12:48).நாம் தேவனிடத்தில் அன்புகூருவதென்பது அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதாயிருக்கிறது (யோவான் 14:15). தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணமாகிறார் (எபிரெயர் 5:9). கர்த்தருக்குக் கீழ்ப்படியாதவர்கள், அவருடைய கோபாக்கினைக்கு பங்காளிகிறார்கள் (II தெசலோனிக்கேயர் 1:7–9). கிறிஸ்து நம்முடைய கர்த்தராக இருக்கும்போது நாம் தேவனுக்கு கீழ்ப்படிய ஜாக்கிரதையாயிருப்போம் (அப்போஸ்தலர் 5: 29).

# இயேசுவை பின்பற்றுபவர்களுக்கான வேதாகமப் பெயர்கள்

Bro. பென்னி மார்ட்டின்

அருமையான திருமறை ஆசான் வாசகர்களே! உங்கள் யாவருக்கும் அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். அவசரமும், பரபரப்பும் நிறைந்த இவ்வுலகில் ஒரு குழந்தை பிறப்பதற்கு பல மாதங்களுக்கு முன்பாகவே அக்குழந்தையின் தாயும் தகப்பனும் பிறக்கப் போகும் குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று தங்கள் உறவினர்களிடமும், நண்பர்களிடமும் விசாரிக்கத் தொடங்கி விடுகிறார்கள். சிலர் அதையும் தாண்டி தங்கள் வாழ்க்கைத் துணையாகிப் போன இனையத்திலும் கேள்விக்கனை களை தொடுத்து தேடுகிறார்கள். அதோடு விட்டுவிடுகிறார்களா என்றால் இல்லை, பொற்றோர்கள் வாயில் நுழையாத பெயர்களை தங்கள் வாரிசுக் களுக்கு வைத்து வாழ்த்துவதோடு நின்றுவிடாமல் நினைத்துப் பார்க்க முடியாத வகையில் பெயர் வைக்கும் நிகழ்ச்சியையும் ஆனந்தமாகவும், ஆடம்பரமாகவும், நடத்திவிடுகிறார்கள். அண்ட சராசரங்களையும் தம் வாயின் வார்த்தையினாலே உண்டாக்கி வானுலகில் வீற்றிருக்கும் நம் தேவனும் தம்முடைய பிள்ளை களுக்கு பல பெயர்களைக் கொடுக்கிறார். தேவனுடைய ஜனங்கள் பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். ஆனால், புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவை பின்பற்றினவர்கள் என்னவாக அழைக்கப்பட்டார்கள்? அவர்கள் எப்படியாக அடையா ளப்படுத்தப்பட்டார்கள்? அவர்கள் எப்படியாக அடையாளப்படுத்தப் பட்டார்கள்? அவர்களுக்கு ஏதாவது சிறப்புப்பெயர்கள் கொடுக்கப் பட்டனவா? இக்கேள்விகள் பொருத்தமானவைகளும், முக்கிய மானவைகளுமாயிருக்கிறபடியால் வேதாகமம் அதைப்பற்றி என்னச் சொல்கிறதோ அதற்கேற்றபடி பதிலளிக்க நாம் கடமைப் பட்டிருக்கிறோம். புதிய ஏற்பாட்டில் இயேசுவைப் பின்பற்றுபவர் களை அடையாளப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கிற நான்கு பெயர்களைப் பற்றி இக்கட்டுரையில் நாம் பார்ப்போம்.

## I சீஷர்கள்

சீஷர்கள் என்னும் பெயர்தான் நற்செய்தி நூல்களில் அதிக மாகப் பயன்படுத்தும் பெயராகக் காணப்படுகிறது. சீஷன் என்பதற் கான பொருள் கற்றுக்குட்டி, மாணவன், குருவை அப்படியேப் பின்பற்றுவன் என்பவைகளாயிருக்கிறது. இவ்வார்த்தை கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு பொருந்துகிறபடியினாலே இதன் பொருள் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு ஒருவர்

உண்மையாயிருந்து அவரைப் பின்பற்றுவது என்று பொருள்படும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்நாட்களில் பரவலாக போதகராகத்தான் அறியப்பட்டார். எனவே, சீஷன் என்னும் இப்பெயர் போதகர் அல்லது ஆசிரியருக்கும், மாணவருக்கும், இடையில் காணப்படும் உறவைத்தான் குறிக்கிறது. நாம் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைந்திருந்து, மிகுந்த கனிகளைக் கொடுத்தால்தான் இயேசுவுக்கு மெய்யான சீஷர்களாக இருக்க முடியும் [யோவான் 15:78]. நாம் இவ்வுலகில் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் இயேசுவின் சீஷர்கள் என்று எல்லோராலும் அறியப்படுவோம். அவர்கள் ஒரு வருஷ காலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகிவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று [அப்போஸ்தலர் 11:26].

## II **சகோதரர்**

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு கொடுக்கப்படும் இரண்டாவது பெயர் சகோதரர் என்பதாகும். நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மத்தேயு 23:8 ல் தம்முடைய சீஷர்களைப் பார்த்து **நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்** என்று சொன்னார். இப்பெயர் கிறிஸ்து பரமேறின பிறகு அதிக அதிகமாய் பயன்டுத்தப்பட்டது. அப்போஸ்தலனாகிய பேதுரு I பேதுரு 2:17 எல்லோரையும் கனம் பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள் என்று சொல்கிறார். பழுத்த தாசனாகிய பவுலும் பலமுறை தன்னுடைய எழுத்துக்களில் **சகோதரர்** என்னும் பெயரைப் பயன்படுத்தியிருக்கிறார் இந்த உதாரணங்களை கவனியுங்கள் I கொரிந்தியர் 6:8 ன் பவுல் கொரிந்து சபையைப் பார்த்து **நீங்கள் அநியாயம் செய்கிறீர்கள், நஷ்டப்படுத்து கிறீர்கள், சகோதருக்கும் அப்படி செய்கிறீர்களே** என்று கடிந்து கொள்கிறார். கலாத்தியர் 6:1 ல் கலாத்திய சபைகளுக்கு பவுல் எழுதும் போது சகோதரே ஒருவர் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால் என்று எழுதுகிறார். அதேபோல் ரோமர். 12:10ல் பவுல் ரோமபுரி சபையாரிடம் சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள் என்று வலியுறுத்துகிறார்.

சகோதரர் அல்லது சகோதரர்கள் என்னும் வார்த்தை சகோதரர் மத்தியில் ஒருவருக்கொருவர் வெளிப்படுத்த வேண்டிய கடமைகளைக் காட்டுகிறது. சகோதரருக்கு விரோதமாகச் செயல்படுவது தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்வதற்கு சமமாகும். இப்படி சகோதரருக்கு விரோதமாகப் பாவஞ்செய்து

பலவீனமுள்ள அவர்களுடைய மனச்சாட்சியைப் புண்படுத்துடி தினாலே நீங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாகப் பாவஞ் செய்கிறீர்கள் (I கொரிந்தியர் 8:12). நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கிற படியால், சகோதர சகோதரிகளாக இருக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

## III பரிசுத்தவான்

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களை அடையாளப்படுத்தும் மூன்றாவது பெயர் பரிசுத்தவான். மத உலகில் இப்பெயர் அதிகமாகப் பிரயோகப்படுத்தப்படுவதால், நாம் இவ்வார்த்தையை பயன்படுத்துவதிலிருந்து விலகியிருக்கிறோம். ஏனென்றால் சிலர் கிண்டலாகக்கூட நான் அந்த அளவு பரிசுத்தவான் இல்லை என்று சொல்வதை கோள்விப்பட்டிருக்கிறோம். மிகவும் விசேஷமான பரிசுத்தவான் என்னும் வார்த்தையை நாம் பயன்படுத்த தயங்கக் கூடாது. பரிசுத்தவான் என்னும் பதம் பரிசுத்த வேதாகமத்தில் சுத்தமாகத் தன்னை தேவனுக்கு ஒப்புக்கொடுத்த ஒருவரைத்தான் குறிக்கும் படி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இப்பதம் மத ரீதியாக தன்னை சூப்பர் ஹீரோவாக பார்க்கும் ஒருவருக்குப் பொருந்தாது.

பரிசுத்தவான் என்னும் பதம் புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உதாரணமாக , அப்போஸ்தலர் 9:13 ல் அனனியா ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்கு களைச செய்தானென்று அவனைக் குறித்து அநேகரால் கேள்விப் பட்டிருக்கிறேன் என்று சொன்னான். கிறிஸ்துவைப் பின்பற்றி னவர்கள் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்பட்ட திற்கான எண்ணற்ற குறிப்புகள் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்கின்றன. ஆம் கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றுபவர்கள் எல்லோரும் பரிசுத்தவான்கள் என்னும் பேருண்மையை நாம் பல சந்தர்ப்பங் களில் மறந்து விடுகிறோம்.

பிரியமானவர்களே, இதுகாறும் நாம் இயேசு கிறிஸ்துவை பின் பற்றினவர்கள் என்னவாக அழைக்கப்பட்டார்கள்? அவர்கள் எப்படி யாக அடையாளப்படுத்தப்பட்டார்கள்? அவர்களுக்கு கொடுக்கப் பட்ட சிறப்பு பெயர்கள் என்னவென்றெல்லாம் பார்த்தோம். இப்பெ யர்களிளெல்லாம் நாமும் அழைக்கப்படுகிற படியால் பேர் சொல்லி அழைக்கும் தேவனைப் பற்றிக் கொண்டு, அவருடைய வார்த்தை களின் படி நடந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம். ✝

# கிறிஸ்து என்னும் மார்க்கம்
# உலகின் முதல் குடும்பம்

சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ்ராஜகுமார், சென்னை

**முன்னுரை :**

1. உலக விஞ்ஞானத்தின்படி மனிதன் குரங்கிலிருந்து வந்தான் என்று பள்ளிகளில் படித்திருக்கிறோம்.
2. ஆனால் தேவனை விசுவாசிக்கிறவர்கள் அவர் மனிதனை மனிதனாகவே படைத்தார் என்று நம்புகிறார்கள். கடவுள் என்பவர் படைக்கிறவராய் இருக்கவேண்டும்.
3. சிருஷ்டிக்கிற வல்லமை இல்லாதவரால் கடவுளாய் இருக்க முடியாது. ஒரு படைப்பாளியாக இல்லாதவரை நாம் கடவுளாக ஏற்றுக்கொள்ளக்கூடாது.
4. **பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்** ஆதி. 1 : 2.
5. அநேகர் இந்தவசனத்தைச் சுட்டிக்காட்டி, எத்தனை ஆயிரம் அல்லது லட்சம் ஆண்டுகள் ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருந்தார் என்பது நமக்குத் தெரியாது என்பர்.
6. ஆனால், **கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லா வற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்** என்று வேதம் கூறுகிறது, யாத். 20 :11.
7. தேவன் மற்ற எல்லாவற்றையும் தம்முடைய வார்த்தை யினாலே சிருஷ்டித்தார், சங். 33 : 6.

**1. ஆனால் மனிதனைமட்டும் பூமியின் மண்ணினால் சரீரத்தை உண்டாக்கி, அதில் ஆவியாகிய உள்ளான மனிதனையும், அவனுக்கு ஜீவனையும் கொடுத்து, முழு மனிதனாக உண்டாக்கினார்**

A. **தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்,** ஆதி. 2 : 7கூறுகிறது. வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, மனுஷனுடைய ஆவியை அவனுக்குள் உண்டாக்குகிற கர்த்தர் ... என்ற சக 12:1 கூறுகிறது.

B. தேவன் மனிதனை தம்முடைய சாயல் ரூபத்தில் படைத்தார்.

1. அதன்படி, **பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக ...** என்றார்.

2. **தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்,** ஆதி. 1 : 26 – 27.

C. பின்பு, தேவன் தாம் சிருஷ்டித்த மனிதனுக்காக ஏதேன் என்னும் தோட்டத்தை உண்டாக்கி, அதைப் பண்படுத்தவும் காக்கவும் அவனை அதிலே வைத்தார்.

1. **தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை ... ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்,** ஆதி. 2 : 8, 15.

2. ஏதேன் தோட்டம் தேவனுடைய தோட்டம் என்று வேதம் கூறுகிறது, எசே. 28 : 13.

**2. தேவன் மற்ற சிருஷ்டிப்புகளைப் பார்க்கிறார் அவைகள் ஜோடிகளாய் இருக்கின்றன, ஆனால் மனிதன் மட்டும் தனிமையாய் இருந்தான், அது நல்லதல்ல என்று அவர் எண்ணினார்.**

A. பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையா யிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார், ஆதி. 2 : 18.

B. ஆதாம், நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்து பறவைகளுக்கும், காட்டு மிருகங்களுக்கும் பேரிட்டு முடித்த பின்பு, அவனுக்கு ஏற்ற ஒரு துணையை உண்டாகுவதாக தேவன் சொன்னார். மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் பெயர்வைக்கும் அளவிற்கு மனிதன் ஞானம், அறிவு, புத்தி உள்ளவனாக இருந்தான். ஆகவே மனிதன் ஒரு மிருகமாகப் படைக்கப்படவில்லை.

C. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார், ஆதி. 2 : 21.

D.தேவன், ஆதாமுக்கு ஏற்ற துணையை உண்டாக்கவில்லை,

மாறாக ஆதாமின் விலா எலும்புகளில் ஒரேயொரு விலா எலும்பை எடுத்து, ஒரேயொரு மனுஷியை உருவாக்கி, அந்த பெண்ணை ஆதாமுக்குத் துணையாக அவனிடத்தில் கொண்டுவந்தார்.

1. **தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்,** ஆதி. 2 : 22.

2. தேவன், சிருஷ்டிப்பிலேயே ஒருவனுக்கு ஒருத்தி என்கிற கோட்பாட்டை நிலைநிறுத்தினார்; அன்றைக்கு தேவன் அவர்களை இணைத்துவைத்தர்.

3. அங்கு மாப்பிள்ளை வீட்டாரோ, பெண் வீட்டாரோ இருந்ததில்லை; அழைப்பிதழ் இல்லை, விருந்து உபசரிப்பு இல்லை, நகைகள், துணிமணிகள் இல்லை, அந்தத் திருமணம் அரசாங்கத்தால் பதிவு செய்யப்படவில்லை. ஆனால், தேவனுடைய மனதிலே நினைவுபடுத்தப்பட்டது.

4. இயேசுவானவர் பூமியில் வாழ்ந்த காலத்தில் இந்தத் திருமணத்தை நினைவுபடுத்தினார், **தேவனே அவர்களை இணைத்தார், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன் என்கிறார்,** மத். 19 : 4 – 6.

5. தேவன் மட்டுமே ஆதாம் ஏவாள் இணைப்புக்குச் சாட்சியாயிருந்தார். அதுவே திருமணம். தேவனுடைய வழிகாட்டுதலும் ஐக்கியமும் இல்லாமல் பெரும் பொருட் செலவில் செய்யப்படும் திருமணங்கள் தேவனுக்கேற்கும் திருமணங்கள் அல்ல. அவைகள் ஆவிக்குரிய நன்மைகளைக் கொடுக்காது.

6. **ஏன் என்று கேட்கிறீர்கள்; கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார்...** என்கிறார், மல். 2 : 14.

**தொடரும் ...**

# ஒருவரையும் அற்பமாக எண்ணாதேயுங்கள் !

## Bro. பாண்டியன்

இயேசு ஆண்டவரின் நாமத்தில் வாழ்த்துக்கள். உலகத்தில் பெரியவர்கள் சிறுபிள்ளைகளுக்கு பாடம் செல்லி கொடுக்கும் போது நீங்கள் காந்தி, நேரு போல அல்லது அப்துல்கலாம், ஜான்சி ராணி போல பெரிய புகழ் பெற வேண்டும் என்று சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனால் நமதாண்டவர் பெரியவர்களைப் பார்த்து ''நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகளைப் போல ஆகாவிட்டால் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்''என்று வித்தியாசமான போதனைகயைக் கொடுத்தார். காரணம் இந்த உலகம் உருவத்தை பார்க்கிறது. ஆனால், தேவன் மனிதனுடைய மனதைப் பார்க்கிறார். கிறிஸ்தவர்கள் உலகத்திலிருந்து தெரிந்து கொள்ளப்பட்ட விசேஷமானவர்கள் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

மேற்கண்ட போதனையின் பின்னணி என்னவெனில், சீஷர்கள் தங்களில் யார் பெரியவர்? என்று வாதம் செய்தபடியால் அவர்களுக்குப் பாடம் புகட்டும் வண்ணமாகத்தான் ஆண்டவர் சிறுபிள்ளைகளைப் போல மனம் மாற வேண்டும்மென்றார். அவர்கள் சண்டை போட்டுக் கொண்டாலும் அதை மறந்து உடனே சமதானம் ஆகிவிடுவார்கள். அவர்களுக்குள் ஏழை பணக்காரன் போன்ற ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல், பொறாமை இல்லாமல் பழகும் பண்புகள் காணப்படுவதால் இப்படிச் சொன்னார். யார் பெரிய வன் என்ற எண்ணங்கள் பிள்ளைகளுக்குள் இல்லாதபடியால் அவர்களிடமிருந்து நாம் பாடம் பெற்றுக்கொள்ளும்படியாக '' இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள் என்றார் (மத் 18: 10).

வேதத்தில் மற்றவர்களை அற்பமாக எண்ணிய சிலரைப் பார்த்து நாம் சில பாடங்களைக் கற்றுக்கொள்வோமா? முதலில், சாராளின் அடிமைப்பெண் ஆகார் பற்றி நாம் வாசிக்கும்போது, அவள் தான் கர்ப்பவதியான போது பிள்ளையில்லாத சாரளை அற்பமாக எண்ணினாள் (ஆதி 16:4). உண்மையில், தன் எஜமானி சாராளை நன்றியுடன் நினைத்துப் பார்க்க வேண்டியவள். அற்பமாக எண்ணியது எவ்வளவு பெரிய மோசமான காரியம் என்று எண்ணிப் பாருங்கள். இஸ்ரவேல் ஜனங்கள் கூட எகிப்தின் அடிமைத்தனம் நீங்கி கானானில் வீடுவாசல் ஏற்ப்படுத்தித்தந்த தேவனை அசட்டை பண்ணி, கண்டித்த தீர்க்கதரிசிகளை கொன்றுபோட்டு தேவனுடைய பெரிதான கிருபையை அற்பமாக எண்ணினார்கள் (நெகே 9:25,26) நம்முடைய வாழ்வில் தேவன் செய்த அநேக நன்மைகளை நினைத்துப் பார்த்து நாம் நன்றியுள்ளவர்களாய் இருப்போம்.

தேவன் நம்மை ஆசிர்வதித்து உயர்த்தும் போது நாம் மேட்டிமை சிந்தைக் கொள்ளக் கூடாது. யாக்கோபின் மனைவி லேயாளைக் கூட ராகேல் அற்பமாக எண்ணிய போது கர்த்தர் அதைக்கண்டு லேயாளைக் கர்ப்பந்தரிக்கச் செய்து இஸ்ரவேலின் மூத்தகுமாரன் ரூபன் பிறக்கச் செய்தார் (ஆதி 29:31) பிற்பாடு சிமியேன் பிறந்த போது லேயாள், '' நான் அற்பமாய் எண்ணப்பட்டதைக் கர்த்தர் கேட்டருளி என்று குறிப்பிடுகிறாள். எனக்கன்பான தேவப் பிள்ளைகளே, நீங்கள் மற்றவர்களால் அற்பமாக எண்ணப்படும் போது நினைவில் வையுங்கள், தேவன் அதைக் காண்பது மட்டுமல்ல, நம் தேவன் கேட்டு நமக்கு உதவி செய்கிறார். மலடியாய் இருந்த அன்னாள் அவளுடைய சக்களத்தியால் மனமடிவாகி சாப்பிடாமல் அழுதுகொண்டிருப்பாள் (1 சாமு 1:6,7) ஆனால் அவள் தேவனிடம் முறையிட்டபோது இஸ்ரவேலை நியாயந்தீர்த்து ராஜாக்களை அபிஷேகம் பண்ணுவித்த பெரிய தீர்க்க தரிசியான சாமுவேலைப் பெற்றெடுத்து தேவனுக்கு நன்றி சொன்னாள்.

பிறரை அற்பமாக எண்ணும்போது ஒருவர் அவரை அவமதிக் கிறார் என்று பார்க்கிறோம். தேவனுடைய பெட்டி அநேகத் தடைகளுக்கு பின்பு தேவனுடைய நகரத்திற்கு திரும்பி வந்தபோது தாவீது நடனம் பண்ணினான். இதைப் பார்த்த அவனுடைய மனைவி மீகாள் தன் இருதயத்தில் அவனை அவமதித்தால். இதைக் கண்ட தேவன் அதற்கான தண்டனையாக அவள் வாழ்நாள் முழுவதுமாக பிள்ளை இல்லாமல் போகும்படி, அதாவது, மலடி யாகும்படி செய்தார். (2சாமு 16:23). இதையெல்லாம் பார்க்கும் போது கர்ப்பந்தரிக்கச் செய்கிறவரும், கர்ப்பத்தை அடைக் கிறவரும் பரலேகத்தில் தேவன் என்று அறிகிறோம். பிள்ளையில்லாதவர்கனை நாம் யாரும் தவறாக நினைக்கூடாது என்பது இதில் தெளிவாகப் புரிந்துக் கொள்கிறோம். பெறப்பண்ணு கிறவரும், பிரசவிக்கப் பண்ணுகிறவரும் நம் தேவனே (ஏசா 66:9)

தேவனுக்கும், உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்ய முடியாது என்று சொன்ன ஆண்டவர் ஒன்றைப் பற்றிக்கொண்டு மற்றதை அசட்டைப் பண்ணுவான்'' என்றார். இதுவும் ஒருவித அற்பமாக எண்ணுகிற விஷயமாகும். இன்றும் சிலர் சபைக் கூடும் நாளில் சம்பாதிக்கும் வாய்ப்பு வரும்போது சபைக் கூடுதலை அற்பமாக எண்ணிவிடுகிறார்கள். இது பெரிய பாவமாகும். நமக்கு சம்பாதிக்கிற பெலன் தருகிறவரே அந்த தேவன்தான் என்பதை நாம் மறக்கக் கூடாது (உபா 8:17,18) ஆகவே, ஆண்டவர் சொன்னபடி முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியை யும் தேடுவதில், சபை கூடுதலுக்கு முன்னுரிமை தரவேண்டும். அப்போது நம் தேவைகளை நிச்சயமாக தேவன் சந்திப்பார்.


பிறரை பரியாசம் பண்ணுதலும் அற்பமாக எண்ணுவதின் அடையாளமே ! நெகேமியா காலத்தில் அலங்கம் கட்டப்பட்ட போது சன் பல்லாத்து, தொபியா போன்ற புற ஜாதி மக்கள் '' இந்த அற்பமாக யூதர் கட்டும் கல்மதில் ஒரு நரி ஏறிப்போனாலே இடிந்து விழும் '' [நெகே 4: 1,3] எனக் கேலி பேசினர். இப்போதும் சிலர் சபைஊழியர்களை இவ்விதமாக அற்பமாக எண்ணும் பாவத்தை செய்கிறார்கள். ஆனால், சகரியா சொல்வதை கவனியுங்கள் அற்பமான நாளை யார் அசட்டை பண்ணலாம். கர்த்தருடைய கண்கள் செருபாபேலின் கையில் உள்ள தூக்குநூலைச் சந்தோஷ மாகப் பார்க்கிறது. [சக 4:10] சபையின் ஆரம்ப காலத்திலும் யூதர் புறஜாதியாரை அற்பமாக எண்ணியபோது பேதுருவிற்கு தந்த ஒரு தரிசனத்தின் மூலம் தேவன் பட்சபாதமற்றவர் என்பதை புரிய வைத்தார் [அப் 10:34,35]


ஒருவனுக்குப் பெருமையான எண்ணங்கள் இருக்கும் போது மற்றவரையும் அற்பமாக எண்ணுகிறார்கள். லூக் 18ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ''பரிசேயன் /ஆயக்காரன் '' உவமை இதற்கு நல்ல உதாரணமாகு. மேலும், ஒருவன் எழுதப்பட்டிருக்கும் மிஞ்சி எண்ணும் போது அவன் மற்றவனுக்கு விரோதமாக இறுமாப்பு அடைகிறான் [1கொரி 4:6] அதே போல் சபை பிரச்சனைகளுக்கு வெளியாட்களை நாடாமல் சபையில் உள்ள நீங்கள் அற்பமாக நினைப்பவர்களை வைத்தே தீர்த்துக் கொள்ள வேண்டும் [1கொரி 6:4] தரித்திரர்களை அற்பமாக எண்ணுகிற மக்கள் மத்தியில் தேவன் அவர்களை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாக வைத்து உள்ளார் கள் என்கிறார் யாக்கோபு. கர்த்தருக்கு பயந்தவர்களை கனம் பண்ண வேண்டும் என்பது தேவசித்தம் [சங் 15:4] அப்போஸ்தலனளை பவுலை சரீர தோற்றத்தைப் பார்த்து தொரிந்து சபையார் அற்பமாக எண்ணினார்கள். நம் ஆண்டவர் இயேசுவை அசட்டை பண்ணப்பட்டவர் ஆவார்.

எனக்கன்பான தேவ பிள்ளைகளே நம்மை பிறர் அற்பமாக எண்ணும்போது தேவன் அதைக்கண்டு நமக்கு இரங்குகிறார் என்பதை நினைவில் வையுங்கள். அதே போல, கிறிஸ்துவின் உபதேசப்படி நாம் ஒருவரையும் அற்பமாக எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அப்போஸ்தலருடைய உபதேசப்படி பெலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும் [ரோமர் 15:1] நம்முடைய பிள்ளைகளுக்கும் சிறுவயதில் இருந்தே மற்றவரை தரக்குறைவாகப் பேசாமல் மதிக்க கற்றுக் கொடுப்போம்.

தேவனுடைய சமாதானம் அனைவருக்கும் உண்டாவதாக. ஆமேன். ✝


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

















# World Evangelism Gospel Media

**Rajanayagam & Benny Martin On Nambikkai TV**
Every Tuesday 6:30 - 7.00 am
Every Friday 7:30 - 8.00 am

**Arjunan on Nambikkai TV**
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

**Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking**
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

**P.K. Varghese In Malayalam :**
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

**Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :**
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

**Joshua & Ricky Gootam In Telugu:**
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm


**For English Voice of Truth**
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month


# எங்களது இதர வெளியீடுகள்





சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்**




## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்

செவ்வாய் காலை 6.30 - 7.00 மணி

வெள்ளி காலை 7.30 - 8.00 மணி








## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.







இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.